## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.71/2022

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : தனபால் | ஜாதி | : -- |
| வயது | : 56 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : தனியார் நிறுவனம் (MRF) | வட்டம் | : திருத்தணி |

**19.02.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. நான் வாங்கிய மனை எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.307/2A1E1 ஆகும். இந்த மனையை 11.10.2017ல் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் ரவிக்குமாரிடமிருந்து கிரையம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படுவதுதான் எனது கிரைய ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் வா.சா.ஆ 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வாதி கல்யாண்குமாரின் அப்பா பெயர் முருகேசன் என்றால் சரிதான். அம்மா பெயர் முனியம்மாள் என்றால் சரிதான். எனது இடத்திற்கு கிழக்கே சுப்பிரமணிய பிள்ளை மனைவி சிவகாமி அம்மாள் மனை என எனது கிரைய ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்கே சுரிகாபுரம் முருகேச ரெட்டி மனை என்றால் சரிதான். வடக்கே 12 அடி அகலமுள்ள பொது சாலை என்றால் சரிதான். தெற்கே சுரிகாபுரம் முருகேச ரெட்டி மனைகள் என்றால் சரிதான். அவர் மொத்தமாக மனை இட பிரிவாக பிரித்துள்ளார்.

8. கிழக்கேயும் தெற்கேயும் குட்டை புறம்போக்கு என நான் சொல்வதுபோல் வா.சா.ஆ 18 ஆன எனது கிரைய ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் சொத்திற்கு கிழக்கேயும் தெற்கேயும் பட்டா இடம் என்றால் சரிதான். எனக்கு ஏகநாதன் என்ன உறவு என்றால் மருமகன் ஆவார். வா.சா.ஆ 18 பத்திரம் ஏகநாத பெயரில் உள்ளது என்றால் ஆமாம். ஆனால் எனது வாக்குமூலத்தில் நான்

கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. என் மருமகன் இடம் என்றுதான் ஆரம்பத்தில் இருந்து சொல்லி வருகிறேன். எனக்கு வா.சா.ஆ 18 சொத்திற்கு அருகில் வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 பட்டா முனியம்மாள் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 1 மற்றும் பி.வா.சா.ஆ 2 பட்டா இந்த வழக்கிற்கு பின்பு வாங்கப்பட்டது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 2ல் உள்ள முனியம்மாள் க/பெ கோவிந்தசாமி என்று உள்ளது என்றால் ஆமாம்.

9. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 கிராம நிர்வாக அதிகாரி சான்று இவ்வழக்கிற்கு பின்பு 07.08.2023ல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 முதல் பி.வா.சா.ஆ 6 வரை ஆவணங்களும் இவ்வழக்கிற்கு பின்பு 07.08.2023ல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் பகுதி கௌன்சிலர் சாமிராஜன் எனக்கு நண்பர் என்றால் எனக்கு அவரை தெரியும். அவர் எனது நண்பர் என்பதால் அவரை வைத்து பி.வா.சா.ஆ 1 முதல் பி.வா.சா.ஆ 6 வரை ஆவணங்களும் இவ்வழக்கிற்கு பின்பு 07.08.2023ல் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் தாயார் முனியம்மாள் 21.09.2008ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கே உள்ள இடத்தில் முனியம்மாளின் வாரிசுகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது.

10. 01.05.2014ல் முனியம்மாள் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் தவறு. சம்மந்தம் உள்ளது. அவ்வாறு வழக்கு சொத்தில் எங்களுக்கு சம்மந்தம் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுடையது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் வேண்டுமென்றே வாதியிடம் பிரச்சனை செய்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி நாலடி உயரம் சுவர் எழுப்பியுள்ளார் என்றால் ஆமாம். அதில் நாங்கள் 21.09.2022ல் கழிவுநீர் கால்வாய்க்காக ஓட்டை போட்டு கழிவு நீர் கடத்த முயற்சித்தோம் என்றால் 30 வீட்டுக்காரர்களும் அங்கு குட்டையில்தான் கழிவுநீர் விடுகிறோம். அது பாறை புறம்போக்காகும்.

11. தாவா சொத்து பாறை புறம்போக்கு இல்லை என்றாலும் பட்டா நிலம்

என்றாலும் நாங்கள் வேண்டுமென்றே தாவா சொத்தில் கழிவுநீர் விட முயற்சி செய்கிறோம் என்றாலும் அதனால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் தாசில்தார், VAO, RI அனைவரும் வந்த அளந்து பாறை புறம்போக்கு அதில் குட்டையில் தண்ணீர் விடலாம் என்று சொன்னார்கள். அதற்குள் வாதி வந்து எங்களை அடித்துவிட்டார். நாங்கள் புகார் கொடுத்தோம். நான் சொல்வது முற்றிலும் பொய் என்றாலும் வாதி எங்களை அடிக்கவே இல்லை என்றாலும் நாங்கள்தான் தாவா சொத்தில் உள்ள சுற்றுச்சுவரில் துளை போட்டு பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல. நான் ஏதேனும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் இரண்டு நாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். வாதியை இரண்டு நாள் சிறையில் வைத்தார்கள்.

12. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சிறையில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் காவல் நிலையத்தில் இருவரும் சமாதானமாக எழுதி கொடுத்துவிட்டோம். அவரும் எழுதி கொடுத்தார் நானும் எழுதி கொடுத்தோம். கிராம நிர்வாக அதிகாரியிடம் நான் வாங்கியுள்ள பி.வா.சா.ஆ 3 எங்களுடைய மனைக்கானது என்றால் சரிதான். அது தாவா சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் விஷயங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)